DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="2">Case No</td><td>:</td><td colspan="3">O.S :87/2015</td></tr>
<tr><td colspan="2">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">பி.சா. 4</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு. சுவாமிநாதன்</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">போஸ்ட் மாஸ்டர்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>ராமு</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>அலவந்திபுரம்</td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">61</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>பாபநாசம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 08-10-2025

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இன்று சாட்சியமளிக்க வந்திருக்கிறேன். அலவந்திபுரம் கிளை போஸ்ட் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். அலவந்திபுரம் கீழத்தெருவில் வசித்து வந்த நாகராஜனை தெரியும். நாகராஜன் சொத்து சம்மந்தமாக நான் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறேன். டைப் பண்ணின பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கிறேன். வா.சா.ஆ.33 இல் முதல் சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். மற்ற சாட்சிகள் கே.கருப்பையன் மற்றும் பன்னீர்செல்வம். நாகராஜன் கையொப்பமிட்டார். நாகராஜன் கையொப்பம் போட்டதை , நான், கருப்பையன், பன்னீர் செல்வம் ஆகியோர் பார்த்தோம். நாங்கள் கையெழுத்து போட்டதை நாகராஜன் பார்த்தார்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் அலவந்திபுரம். 60 வருடங்களாக அங்கு தான் இருக்கிறேன். நான் பிறந்ததே அந்த ஊர் தான். நாகராஜனை 50 வருடங்களாக தெரியும். இந்த ஆவணத்தை தவிர நான் வேறு ஆவணங்களில் வேறு யாருக்கும் கையெழுத்து செய்திருக்கிறேனா என்றால் இல்லை. உயில் எழுதிய மாதம் வருடம் தேதி தெரியுமா என்றால் 10 வருடத்திற்கு மேல் இருக்கும். நான் கையெழுத்து போட்ட தேதியன்று அலுவலகத்தில் தான் இருந்தேன். என்னை கையெழுத்து போட நாகராஜன் வீட்டில் வேலை பார்க்கும் ஒரு பெண் வந்து கூப்பிட்டார். அவர் கூப்பிட்டதால் நான் போனேன். நாகராஜன் என்னை வந்து

கூப்பிடவில்லை. அவர் பையன்களும் கூப்பிடவில்லை . நான் வேலை பார்க்கும் போஸ் ஆபிஸில் இருந்து நாகராஜன் வீடு 100 மீ இருக்கும். கிளை போஸ்ட் ஆபீஸிற்கு போன் கிடையாது. என்னை வந்து கூப்பிடும் போது பகல் 11 மணி இருக்கும் . அவர்கள் வந்து கூப்பிடும் போது நான் மட்டும் தான் அலுவலகத்தில் இருந்தேன். நான் நாகராஜன் வீட்டிற்கு போன போது 11 மணி இருக்கும். நாகராஜன் வீட்டில் ரூமிற்குள் இருந்தார் . அந்த ரூமிற்குள் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் மட்டும் தான் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. அந்த மற்ற சாட்சிகள் அங்கிருந்தார்கள் . எனக்கு முன்பு வந்தார்களா பின்பு வந்தார்களா என்று நினைவில்லை. நான் போனபோது இந்த ஆவணம் டைப் செய்த நாகராஜன் கையில் இருந்தது . இந்த ஆவணத்தை எங்கு டைப் செய்தார்கள். யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது . இந்த உயில் எழுதும் போது நாகராஜ படையாச்சிக்கு 90 வயது இருக்குமா என்றால் இருக்கலாம். நான் போனவுடன் நாகராஜன் என்னிடம் என்ன சொன்னார் என்றால் பிள்ளைகளுக்கு உயில் எழுதி வைத்திருக்கிறேன் சுவாமிநாதன் சாட்சியாக கையெழுத்து போடுங்கள் என்று சொன்னார் . நாகராஜ படையாச்சிக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரி. முதல் தாரத்திற்கு 3 பெண், 4 பையன். இரண்டாம் மனைவிக்கு 4 மகன்கள், ஒரு பெண். நாகராஜன் அந்த உயிலை என் கையில் கொடுத்து தான் கையெழுத்து போடச்சொன்னார் . நான் அந்த உயிலை முழுவதுமாக படிக்கவில்லை. எத்தனை பக்கங்கள் இருந்தது என்று ஞாபகமில்லை. கத்தையாக இருந்தது. நான் பத்திரத்தை வாங்கும் போது நாகராஜ படையாச்சியின் கையெழுத்து அதில் இருந்தது . நாகராஜ படையாச்சி ஆங்கிலத்தில் தான் கையெழுத்து போடுவார் . நாகராஜனே என்னிடம் பிள்ளைங்களுக்கு சொத்து உயில் எழுதி வைத்திருக்கிறேன் என்று சொன்னார். நான் எல்லாம் பிள்ளைங்களுக்கும் சரியாக எழுதியிருக்கிறீர்களா என்று கேட்கவில்லை. என்னிடம் சொத்து இல்லை . நாகராஜன் எங்கள் ஊரில் எக்ஸ் பிரசிரெண்ட் ஊர் முக்கியஸ்தர் பெரிய ஆளு . அவர் கூப்பிட்டதால் போனேன் . நாகராஜன் கையெழுத்து போடச்சொன்னதால் சாட்சியாக கையெழுத்து போட்டேன். நான் போன போது நாகராஜ படையாச்சி சேரில் உட்கார்ந்திருந்தார் . நடைஉடையாக தான் இருந்தார். அவர் நல்ல

மனநிலையில் தான் இருந்தார். அதன்பின்னர் தான் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. நான் கையெழுத்து போடும் போது முதல் தாரத்து பிள்ளைகள் யாரும் அங்கில்லை. வக்கீல் விஜயராஜ் நான் கையெழுத்து போட்ட இடத்தில் இல்லை. ஆனால் அவர் வீட்டில் இருந்தார். குடும்ப உறுப்பினர்கள் இருந்தார்கள். விஜயராஜ், மகேந்திரன் ஆகியோர் ரூமிற்குள் இல்லை. அங்கே நான் ஒரு 20 நிமிடம் இருந்தேன். நான் கையெழுத்து போட்டு பேசிவிட்டு வந்துவிட்டேன். மற்ற 2 சாட்சிகளை யார் கூப்பிட்டார்கள் என்று தெரியாது. 3 வது சாட்சி பன்னீர் செல்வம் நாகராஜிற்கு உறவினர் என்றால் ஆமாம். பன்னீர் செல்வம் வெளிநாடு போயிருந்தார். சென்ற சனிகிழமை வந்துவிட்டார். கருப்பையனும் ஊரில் தான் இருக்கிறார். எங்கள் போஸ்ட் ஆபிஸில் மூமெண்ட் ரிஜிஸ்டர் இல்லை. வா.சா.ஆ. 33 ஆவணம் ஜெராக்ஸ் ஆவணம் என்றால் சரி. நான் அசல் உயிலில் தான் கையெழுத்து போட்டிருக்கிறேன். அசலை பார்த்தால் தான் என் கையெழுத்தா என்று சொல்ல முடியும் என்றால் இது என் கையெழுத்து தான். அசலில் உள்ளதும் என் கையெழுத்து தான். அதன் நகல் தான் இது. எத்தனை இடத்தில் கையெழுத்து போட்டேன் என்று நினைவில்லை. இந்த உயில் டைப் செய்வதற்கு முன்பு கையால் எழுதப்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான் போனபோது டைப் செய்து வைத்திருந்தார்கள். இந்த உயில் எழுதுவதற்கு எழுத்துகாரருக்கு யார் விவரம் சொன்னார்கள் என்று தெரியாது. வா.சா.ஆ.33 எங்கு கணினியில் அச்சடிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரி. நான் பார்த்த உயில் பத்திரத்தில் தான் எழுதப்பட்டிருந்தது. விஜயராஜும், மகேந்திரனும் தயார் செய்து வைத்திருந்த உயிலில் நாகராஜனின் கையொப்பம் பெற்று, என்னிடம் சாட்சி கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரியல்ல. நாகராஜன் என்னிடம் உயிலில் கையெழுத்து போடச்சொன்னதால், நான் மறுக்கமுடியாமல் அதில் சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். நான் கையெழுத்து போட்டதை நாகராஜன் பார்த்தார். மற்ற இரண்டு சாட்சிகள் வெளியில் நின்றுக்கொண்டிருந்தார்கள். அதன்பின்னர் மற்ற இரண்டு சாட்சிகள் கையெழுத்து போட்டார்களா என்றால் தெரியாது. ஆனால் இரண்டு சாட்சிகளும் வந்து எனக்கு பின்னால் போட்டார்கள். நான் வெளியே வந்த பிறகு அந்த இரண்டு சாட்சிகளும்

ரூமிற்குள் போனார்கள் அதனால் அவர்கள் கையெழுத்து போட்டதாக நான் அனுமானத்தில் சொல்கிறேன். மோசடியாக தயார் செய்யப்பட்ட உயிலில் நான் என்னவென்றே தெரியாமல் நாகராஜன் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல . உயிலே பொய்யானது என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.